**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 20/2021** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | வில்லியம் அசோக் மேத்தா | **வயது** | : | 44 |
| **த.பெ** | : | ஈசாக் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | தச்சாம்பாடி | **தொழில்** | : | ஆசிரியர் |

**18.11.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை**

1)2.3 வாதிகள் என்னுடைய உடன்பிறந்த சகோதரிகள் மற்றும் 4 ம் வாதி என்னுடைய தாயார். 1 ம் பிரதிவாதி என்னுடைய சித்தப்பா, 2 ம் மற்றும் 3 ம் பிரதிவாதிகள் என் பெரியப்பா ஆரோக்கியசாமி அவர்களின் மகன்கள் ஆவார். தாவா சொத்தை நான் அனுபவித்து வருகிறேன். பிரதிவாதிகள் என் அனுபவத்தை தடை செய்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்தந்தை 30.01.2018 அன்று காலமானார். 2021 ல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தாவா சொத்து விவரம் சர்வே நெம்பர் 422/2 ல் 1.76 செண்ட், சர்வே நெம்பர் 238/3 ல் 0.73 செண்ட், சர்வே நெம்பர் 238/4 ல் 0.86 செண்ட், சர்வே நெம்பர் 238/5 ல் 0.73 செண்ட் ஆகும். மேற்படி வழக்கு சொத்துக்கு தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2)என் தந்தை கிரையம் பெற்றதாக நான் கூறும் அசல் பத்திரம் எங்குள்ளது என்றால் யூனியன் பேங்க் ஆப் இந்தியாவில் கடன் வாங்கியதற்காக உள்ளது, என் தந்தை தான் கடன் வாங்கினார் ஆகையால் எனக்கு வருடம் தெரியாது. என் தந்தை இறந்து 7 வருடங்களில் வங்கியிலிருந்து என் தந்தை கடன் பெற்றதால் அதற்கு பணம் செலுத்தவேண்டும் என்று அறிவிப்பு எதாவது வந்ததா என்றால் இல்லை. எதை வைத்து என் தந்தை அசல் ஆவணத்தை வங்கியில் வைத்துள்ளதாக நான் கூறுகிறேன் என்றால் அவர் இறப்பதற்கு 1 மாதம் முன்பு என்னிடம் மேற்படி அசல் ஆவணம் வங்கியில் உள்ளதாக கூறினார். நான் வங்கியிலிருந்து மேற்படி அசல் ஆவணத்தை பெறுவதற்கு முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை.

3)வங்கியில் அசல் ஆவணம் உள்ளதாக நான் கூறுவது பொய், ஆகையால் தான் நான் மேற்படி அசல் ஆவணத்தை பெற்று வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் அப்பா கூறியதால் தான் அசல் ஆவணம் வங்கியில் உள்ளதாக எனக்கு தெரியும். அசல் ஆவணமே என்னிடம் இல்லை ஆகையால் தான் நான் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளுக்கு என் அப்பா 2018 ல் இறந்தபிறகு பவுத்தி பட்டா ஆவணத்தை வாதிகளின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் பட்டா மாற்றம் செய்வதற்கு முயற்சி செய்தேனா என்றால் முயற்சித்தோம் ஆனால் பிரதிவாதிகள்

மனு கொடுத்து தடுத்துவிட்டார்கள். எதற்காக பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்றால் எதற்கு மனு கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

4)வருவாய் துறையில் எதற்காக பட்டா மாற்றம் செய்யமுடியாது என்று கூறினார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யவேண்டும் என்று வட்டாட்சியர், சேத்பட் அவர்களை தரப்பினராக சேர்த்தேனா என்றால் இல்லை. தாவா முழு சொத்தும் எங்களுக்கு உரிமைஇல்லை என்பதால் தான் வட்டாட்சியரை சேர்க்கவில்லை என்றால் அப்படி எதுவும் இல்லை. வட்டாட்சியர் பட்டா மாறறம் செய்யாததால் நான் ஆர்.டி.ஒ மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை. முழுசொத்தும் எங்களுக்கு உரிமை இல்லை என்பதால் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அப்பா பெயரில் பட்டா இருந்ததால் நாங்கள் அப்படியே விட்டுவிட்டோம்.

5)நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-4 அடங்கல் ஆவணம் கிராம நிர்வாக அலுவலர் சான்றிட்டு கொடுத்த ஆவணம் மற்றும் இந்த வழக்கில் வட்டாட்சியரை தரப்பினராக சேர்க்காததால் செல்லாது என்றால் அடங்கல் கிராம நிர்வாக அலுவலர் தான் கொடுப்பார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-2 கணினி சிட்டாவில் குறிப்பிட்டுள்ள சர்வே நெம்பர்கள் 422/1 எ மற்றும் 1 பி வழக்கு சொத்துக்கள் இல்லை என்றால் 422/1 எ, 1 பி ஆகிய சர்வே நெம்பர்களுக்கும் சேர்ததுதான் வழக்கு போட்டுள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-2 கணினி சிட்டாவில் குறிப்பிட்டுள்ள சர்வே நெம்பர் 41/1 எ, மற்றும் 41/1 பி ஆகிய சர்வே நெம்பர்களுக்கும் சேர்த்து வழக்கு செய்துள்ளனா என்றால் ஆமாம்.

6)என் அப்பா, பெரியப்பா மற்றும் சித்தப்பா ஆகியோர் ஒரே கூட்டுகுடும்பமாக இருந்தார்கள் என்றால் சரிதான். என் தந்தை பெயரில் **வா.சா.ஆ-1** ஆவணம் மூலம் வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்றிருந்தாலும் கூட அனைதது சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 22.11.2017 அன்று என் தந்தை 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியான தாவா சர்வே எண் 422/2 ல் 35 செண்ட், சர்வே எண் 298/3 ல் 83 செண்ட், சர்வே எண் 298/4 ல் 16 செண்ட், சர்வே எண் 422/2 ல் கிணறு, பம்புசெட்டில் 3 ல் ஒருபாகம் என்று ஆக மொத்தம் 1 ஏக்கர் 34 செண்ட் செட்டில்மெண்ட் எழுதிகொடுத்து பதிவு செய்யப்பட்டு அன்றைய தேதியில் நடைமுறைக்கு வரப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

7)22.11.2017 ல் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தாவா 3 வது அயிட்ட சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த 14 செண்ட் போக மீதி உள்ள சொத்தை சக்குபந்தி குறிப்பிட்டு என் தந்தை 2,3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. மேலும், 2.3 பிரதிவாதிகளுக்கு 5 வது அயிட்ட சொத்து கிணறு, பம்புசெட்டில் 3 ல் 1 பாகம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாலுக்கா அலுவலகத்தில் பட்டா மாற்றம் செய்வதற்காக சென்றபோது பிரதிவாதரிகள் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம், கிரையபத்திரத்தை காண்பித்து தான் மனுதாக்கல் செய்து நிறுத்திவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்போதிலிருந்து மேற்படி ஆவணங்களிள் விவரம் தெரிந்திருந்தும் உரிமை விளம்புகை வழக்கு தாக்கல் செய்யாமல், தடை உத்தரவு வழக்கு மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் சொத்தை நாங்கள் அனுபவித்து வருகிறோம்.

8)பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அவர்கள் பெயருக்கு பட்டா எண் 1650, ம்றறும் 2411 முன்னிலைக்கு 1ம் பிரதிவாதிக்கு பட்டா மாற்றம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு இப்போது தான் தெரியவருகிறது. பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா மாறிய விவரம் முன்பே தெரியும் ஆனால் பொய்யாக இப்போது தான் தெரியும் என்று கூறிகிறேன் என்றால் சரியல்ல. 22.11.2017 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம், மற்றும் 22.11.2017 கிரையஆவணம் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தவிர்த்து தான் மீதியுள்ள சொத்துக்களுக்கு தான் உரிமைகோர முடியும் என்றால் எங்கள் அப்பா எழுதிவைத்தது எங்களுக்கு தெரியாது. தாலுக்கா அலுவலகத்தில் நான் பட்டாமாறறம் செய்வதற்கு மனுகொடுக்கும் போதே செட்டில்மெண்ட் ஆவணம் கிரையம் ஆவணம் கொடுத்தது தெரியும் தவறாக தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உரிமை இல்லாத சொத்திற்கு நான் தடை உத்தரவு மட்டும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கானது பிரதிவாதிகளின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.11.19 10:36:21 +0530

District Munsif,
Polur.